மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 38, திரு. செ. தாமோதரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

38–

போக்குவரத்துக் கழகங்கள்

***5009– திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தில் இயங்குவதைத் தடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தில் இயங்குவதைத் தடுக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:

1. சகோதர போக்குவரத்துக் கழகங்களுக்கிடையில் தேவையற்ற போட்டியினைத் தவிர்க்கவும், பெருமளவில் செலவினத்தைக் குறைக்கவும், இதுவரை இணைக்கப்படாமல் உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்கள் கோட்டங்களை இணைப்பதென அரசு முடிவெடுத்து போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைக்கும் வரைவு இணைப்புத் திட்டம் அந்தந்த போக்குவரத்துக் கழகங்களால் மைய அரசின் ஒப்புதல் பெற்று அம்முறைப்படி செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. குறித்த காலத்துக்குப் பின் மைய அரசின் இறுதி ஆணை அரசிதழில் வெளியிடப்பட்டவுடன், போக்குவரத்துக் கழகங்கள் இணைக்கப்படும். இதன் மூலம் நிர்வாகச் செலவு குறைந்து லாபம் ஈட்ட வழிவகை ஏற்படும்.

2002 அக்டோபர் 28]

2. அரசிடம் போதிய நிதி ஆதாரம் இல்லாததால், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் ரூ. 100/– கோடி ரூபாய் கடன் பெற்று, போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் மூலமாக போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கவும், அதன் மூலம் 1,550 புதிய பேருந்துகள் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக வாங்க ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் 1,252 அடிச்சட்டங்கள் வாங்கப்பெற்று 15–10–2002 முடிய 1,118 புதிய பேருந்துகள் கட்டப்பட்டுள்ளன. 134 பேருந்துகள் கூண்டு கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், 2002–03 ஆம் ஆண்டில் 2,275 அடிச்சட்டங்கள் வாங்க ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

3. 6–12–2001 முதல் பேருந்துக் கட்டணம் மாற்றியமைக்கப்பட்டதால், செப்டம்பர் 2002 வரை போக்குவரத்துக் கழகங்களின் வருமானம் ரூ. 383 கோடி, அதாவது 18 சதவீதம் உயர்ந்துள்ளது.

4. பயணச் சீட்டின்றி பயணம் செய்பவர்களைக் கண்டறிந்து அபராதத் தொகை வசூலிக்கும் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால், தினசரி போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் இழப்பு தவிர்க்கப்பட்டு, ஓரளவுக்கு வருவாய் பெருக வாய்ப்புள்ளது. 25–7–2001 அன்று அதிரடிப் பயணச் சீட்டுச் சோதனை நாள் கடைப்பிடிக்கப்பட்டு, அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் 80,313 சோதனைகள் செய்யப்பட்டு, 3,746 பயணிகள் பயணச் சீட்டு வாங்காமல் இருந்தது கண்டறியப்பட்டு, அவர்களிடமிருந்து ரூ. 1.12 இலட்சம் வசூலிக்கப்பட்டது. பேருந்து பயண அட்டை உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் வாடிக்கையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

5. பேருந்துகளைக் குறித்த நேரத்தில், தடமுடக்கமின்றி இயக்கவும், அனைத்து நிறுத்தங்களிலும் பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்லவும், பாதுகாப்பான சிறந்த சேவை பொதுமக்களுக்கு வழங்கவும், ஓட்டுநர், நடத்துநர்களுக்குப் பிரத்யேகப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

6. தரமான, தேவையான உதிரி பாகங்களைக் கொள்முதல் செய்து பேருந்துகளைச் சிறப்பான முறையில் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7. திருவிழாக்காலங்கள், முகூர்த்த நாட்கள் மற்றும் முக்கிய பண்டிகை நாட்களில் அதிக எண்ணிக்கையில் பொது மக்கள் நன்மை

பெறும் வகையில் வசதியான பேருந்துகளை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

8. கிலோ மீட்டர் திறன், கிலோ மீட்டர் தூரத்திற்கான ஆயுள் திறன், டயருக்கான ஆயுள் திறனும் தீவிர நடவடிக்கைகள் காரணமாக அதிகரித்துள்ளன.

9. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் கணினிமயமாக்கப்பட்டதன் மூலம் போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாகச் சீர்திருத்தம் ஏற்பட்டுள்ளது.

10. நன்றாகப் பராமரிப்பு மேற்கொள்ளாத பணிமனைகளில் வாரத்தில் இரண்டு நாட்கள் தங்கியிருந்து மேற்பார்வையிட அனைத்து நிர்வாக இயக்குநர்களும் பணிக்கப்பட்டுள்ளனர். மேலும், வருவாய்த் திறனை அதிகரிக்கவும், பணிமனைகளின் பராமரிப்புத் திறனை மேம்படுத்தவும் தேவையான திருத்த நடவடிக்கைகளை எடுக்கிறார்களா என்று கண்காணிக்கும்படியும் பணிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலத்தில் ஏறக்குறைய 70 கோடி ரூபாய் அளவிற்கு மோட்டார் வாகன விபத்து அதிகரித்துள்ளதால், விபத்துகளைக் குறைக்கும் வண்ணம் சீரிய முயற்சிகளை மேற்கொள்ள அனைத்து நிர்வாக இயக்குநர்களும் பணிக்கப்பட்டுள்ளனர்.

11. அலுவலக செலவினங்களைக் குறைக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

12. நிர்வாக இயக்குநர்களிடையே ஒருங்கிணைப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வழித்தடங்கள் மற்றும் இயக்கங்களைச் சீரமைக்கவும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கிடையே ஏற்படும் கசப்பான போட்டி மனப்பான்மையைத் தவிர்க்கும் வகையிலும் செயல்படுவார்கள். இந்த ஒருங்கிணைப்பு அதிகாரிகள் அந்தந்த வட்டாரத்திலுள்ள கழகங்களில் உள்ள பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வருகின்றார்கள்.

13. 2000–2001 ஆம் ஆண்டில் விபத்து இழப்பீட்டுத் தொகையாக, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் அளிக்க வேண்டிய தொகை ரூ. 68.33 கோடியாக உயர்ந்துள்ளது. எனவே, விபத்துகளைக் குறைத்து விபத்து இழப்பீட்டுச் செலவினத்தைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகளை அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் எடுத்துள்ளன:

(அ) ஓட்டுநர்களுக்கு ஒருமித்த கவனத்தை அளிக்க யோகாசனப் பயிற்சி.

2002 அக்டோபர் 28]

(ஆ) ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் பாதுகாப்புப் பயிற்சி அளித்தல்.

(இ) சாலை விதிகளை மீறும் ஓட்டுநர்களை இனம் கண்டுகொள்ள, சாலைப் பாதுகாப்புச் சுற்றுக் காவல் முறை ஏற்படுத்தி, தவறு செய்வோருக்குத் தண்டனை அளித்தல்.

(ஈ) பாதுகாப்பாக விபத்தின்றி ஓட்டும் ஓட்டுநர்களுக்குப் பரிசுத் திட்டங்கள்.

(உ) சாலைப் பயிற்சி நிறுவனம் மூலம் ஓட்டுநர்களுக்கு கனரக வாகனங்கள் இயக்கவும், பழுதுகளைச் சரிபார்க்கவும், பொதுமக்களிடம் நல்லுறவுடன் பழகவும் தீவிரப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

(ஊ) ஓட்டுநர்கள் சிரமத்தைக் குறைக்க, இரவில் 3 மணி நேரத்திற்கு மேல் ஓட்டுநர் தொடர்ச்சியாகப் பேருந்துகளை இயக்காத வகையில், நடவடிக்கை எடுக்க போக்குவரத்துக் கழகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகம் நட்டத்தில் இயங்கிக்கொண்டிருப்பதைத் தடுக்க நல்ல நடவடிக்கை எடுத்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் நட்டத்திற்கு இன்னும் ஒரு காரணமாக சிற்றுந்து போக்குவரத்துதான் என்று கூறுகின்றார்கள். சிற்றுந்துகள் செல்கின்ற வழித்தடங்களில் செல்கின்ற அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பேருந்துகளில் அதிகம் நட்டம் ஏற்படுகிறது என்று கூறுகிறார்கள். அதைச் சரி செய்ய ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா மற்றும் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களைவிட அதிகமான தூரம் ஓட்டுகின்ற சிற்றுந்தின் மீது நடவடிக்கை எடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், இந்த மினி பேருந்துகளை அறிமுகப்படுத்திய காலத்தில், கடந்த காலத்தில் அப்படிப்பட்ட தவறுகள் நடந்து வந்தன என்பது உண்மைதான். விதிமுறைகளுக்கு மாறாக, அவர்கள் permit வாங்கிய வழித்தடங்களில் ஓட்டாமல், பல்வேறு வழித்தடங்களில் விதிமுறைகளை மீறி ஓட்டியதன்

காரணமாக இந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டது உண்மைதான். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்பு, இந்த உண்மை நிலையைக் கண்டறிந்து, இந்த மினி பேருந்துகளை உரிய வழித்தடங்களில் ஓட்டிட வேண்டும், இயக்கிட வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தற்பொழுது அதையெல்லாம் கட்டுப் படுத்தியிருக்கிறது. அதனுடைய விளைவாக 4,852 மினி பேருந்துகளுக்கு permit வழங்கப்பட்டிருந்தபோதிலும், இயங்கிக் கொண்டிருந்த பேருந்துகளில் தவறுதலாகத் தொடர்ந்து இயங்கி வந்த மினி பேருந்துகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, 774 permit–களுக்கு இப்பொழுது அனுமதி ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, தவறாக இயக்கப்பட்ட மினி பேருந்துகள் மீது – fine –அபராதத் தொகை விதித்ததன் மூலமாக அரசுக்கு 64,94,300 ரூபாய் வருவாயும் ஈட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது அரசு எடுத்து வருகின்ற தொடர் நடவடிக்கையின் காரணமாகவும், கடுமையான நடவடிக்கையின் காரணமாகவும் இந்தத் தொகை ஈட்டப்பட்டிருக்கிறது. இப்போது அனைத்து மினி பேருந்துகளும் உரிய வழித்தடங்களில் ஓட்டுவதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு உரிய பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாகக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே, குறிப்பாக தமிழகத்திலே இயங்கி வருகிற போக்குவரத்துக் கழகங்களுக்குப் புதிதாக 1,252 அடிச்சட்டங்கள் வாங்கப்பட்டு, 1,118 புதிய பேருந்துகள் கட்டப்பட்டுள்ளன என்று தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே குறிப்பாக, பல வெளியிலே செயல்பட்டுக்கொண்டிருக்கிற போக்குவரத்துக் கழகங்களுக்கு மட்டுமே புதிய பேருந்துகள் வழங்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். குறிப்பாக, அரசு விரைவுப் பேருந்துக் கழகத்திற்கு ஒரு புதிய பேருந்துகூட இதுவரையில் வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. நெடுந்தூரப் பயணத்திற்குப் பயன்படுகிற அந்த அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குப் புதிய பேருந்துகளை உடனடியாக வழங்குவதற்கு அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியைத் திருப்பிச் செலுத்தக்கூடிய வாய்ப்புள்ள

போக்குவரத்துக் கழகங்களுக்கு புதிய பேருந்துகளை வழங்குவதிலே முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், அந்த அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கும் விரைவிலே நிதி நிலைக்கேற்ப புதிய பேருந்துகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வது, கணக்குகளிலே இருக்கிற scribbling–ஏ தவிர, யதார்த்தமாக இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் மக்களுக்குச் செய்கின்ற சேவைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய compensation கொடுக்கப்பட்டால் நட்டம் இல்லை என்று தொழிற்சங்கங்கள் மூலம் கொடுக்கப்பட்டிருக்கின்ற memorandum–களிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை அரசு பரிசீலித்ததுண்டா? அப்படியென்றால், அதன் மேலே அரசு எடுத்திருக்கிற முடிவு என்ன?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்துக் கழகங்களில் தொடர்ந்து கடந்த காலத்திலிருந்து ஏற்பட்டு வந்த நஷ்டம் இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே இலாபம் என்று, மிகப் பெரிய இலாபம் ஈட்டியிருப்பதாகச் சொல்வது தவறான தகவல். ஆனால், தொடர்ந்து ஏற்பட்டு வருகின்ற நஷ்டத்தை ஈடுசெய்து ஓரளவு இலாபத்தை ஈட்டியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *39*, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

39–

நில மீட்பு

***25459–திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

TRUTH ALONE TRIUMPHS